# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# 2016

**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு**

இல: 100 1/1, லோகோர் சீமாட்டி கடன் நிதிக் கட்டிடம்,
சேர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02

# தொலை நோக்கு

திருப்திகரமான கூட்டுறவாளர் மனித வளத்தை உருவாக்குதல்.

# செயற்பணி

கூட்டுறவு இயக்கம் உறுதியாக நிலைத்திருக்க அத்துறையின் மனித வளத்தின் மேம்பாட்டுக்குத் தேவையான கொள்கைகளைத் தயாரித்தல்.

# செயற்பாடுகள்

- கூட்டுறவு சங்கங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போதும், பதவி உயர்வுகளை வழங்கும் போதும், அவர்களுக்குரிய பணிக்கொடைகளை வழங்கும் போதும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை வரையறை செய்தல்.

- கூட்டுறவு சங்கங்களில் பதவிகளுக்கான நியமனத்தைமேற்கொள்ளும் போது தேவையான தகைமைகளையும், அப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத் திட்டங்களையும் தீர்மானித்தல்

- ஊழியர் பிணக்குகளை (சச்சரவுகளை) தீர்த்து வைத்தல், மேன்முறையீடுகளை விசாரணை செய்தல், ஆணைகளை அமுல்படுத்தல், மற்றும் அமுல்ப்படுத்தத் தவறும் சங்கங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.

- ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக தேவையான பரிசீலனைகளை மேற்கொள்ளுதல்.

- தமது ஊழியர்கள் தொடர்பிலான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது கூட்டுறவு சங்கங்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்கு விதிமுறை/ ஒழுங்கு விதிமுறைகளைத் தீர்மானித்தல்.

- முனித வளத்தை மேம்படுத்துவதற்காக கலந்துரையாடல்களையும், மாநாடுகளையும், பயிற்சித் திட்டங்களையும் செயற்படுத்துதல்.

# கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2016

கூட்டுறவு ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்ட அனைத்து செயற்பாடுகள் பற்றிய விபரமான, புள்ளிவிபரத் தரவுகளை முன்வைத்தல் இந்த அறிக்கையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடிப்படையில் கீழ்க்காணும் அத்தியாயங்களை உள்ளடக்கிய விகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**அத்தியாயம் - 01**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அமைப்பும் 2016 ஆம் ஆண்டினுள் பணிபுரிந்தோரின் விபரங்களும்.

**அத்தியாயம் - 02**

இந்த ஆணைக்குழுவினால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய மட்ட கூட்டுறவு சமாசங்கள் மற்றும் நாடளாவிய ஆரம்ப மட்ட கூட்டுறவு சங்கங்களின் பெயர் விபரங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த சங்கங்களில் பணிபுரிந்த ஊழியர்களின் பெயர் விபரங்கள்.

**அத்தியாயம் - 03**

ஆணைக்குழுவின் காரியாலயத்தின் பௌதீக மற்றும் நிதி நடவடிக்கைகளும் 2016 ஆம் ஆண்டினுள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த செயற்பாடுகளையும் மீளாய்வு செய்தல்.

# உள்ளடக்கம்


**அத்தியாயங்கள்** **பக்கம்**

**I. அத்தியாயம் - 01**

- ஆணைக்குழுவின் அமைப்பும், நிர்வாக நடவடிக்கைகளும் நிறுவனம்சார் கட்டமைப்பும் 02
- ஊழியர்குழுவும் 2016 ஆம் ஆண்டில் பணிபுரிந்தோரும் 03-04

**II. அத்தியாயம் - 02**

தேசிய மட்ட கூட்டுறவு சமாசங்கள் மற்றும் நாடளாவிய ஆரம்ப மட்ட கூட்டுறவு சங்கங்களின் பெயர் விபரங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த சங்கங்களில் பணிபுரிந்த ஊழியர்களின் பெயர் விபரங்கள் 06-08

**III. அத்தியாயம் - 03**

- 2016 ஆம் ஆண்டினுள் புரிந்த சாதாரண மற்றும் விசேட செயற்பாடுகளை மீளாய்தல் 10-15
- 2016 ஆம் ஆண்டின் பௌதீக மற்றும் நிதிப் பரிமாற்ற செயற்பாடுகள் 15-19
- 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த விசேட கருத்திட்டங்கள் 19

# அத்தியாயம் - 01

- ஆணைக்குழுவின் அமைப்பும், நிர்வாக நடவடிக்கைகளும், செயற்பாட்டுக் கட்டமைப்பும்

- ஊழியர்குழுவும் 2016 ஆம் ஆண்டில் பணிபுரிந்தோரும்

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் யாப்பும் நிர்வாக நடவடிக்கைகளும்.

1972 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்டத்தின் 4 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்படும் ஒழுங்கு முறைகளுக்கேற்ப கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் அடங்கலாக ஆணைக்குழு அமையும். அந்த ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படும் அதேவேளை அதன் உறுப்பினர்கள் மூவரும் தமது நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலத்துக்கு தமது பதவிகளை வகித்தல் வேண்டும். அவ்வாறான போதிலும் உறுப்பினர்களின் இராஜினாமா, அமைச்சரினால் பதவியிலிருந்து நீக்குதல், மரணமடைதல் போன்ற காரணங்களினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு மூன்று வருட காலத்தினுள் எஞ்சியுள்ள காலத்துக்காக வேறு எவரேனும் தகுதியானவரை நியமிக்க அமைச்சரால் இயலும்.

2016ஆம் ஆண்டுஇவ் ஆணைக்குழுவின் தலைவராக திருமதி ஆர்.எம்.சீ ஜி. உடுகம்பொல அவர்கள் செயற்பட்டதுடன் மற்றைய உறுப்பினர்களாக சட்டத்தரணி திரு.அய். எம்.ஜி. ஈரியகொல்ல மற்றும் சட்டத்தரணி திரு பந்துல விஜேயசிங்க ஆகியோரும் செயற்பட்டிருந்தனர்.

1972 கூட்டுறவு ஆணைக்குழுவின் சட்டத்தின் 9 (1) உறுப்புரையின் பிரகாரம் இந்த ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். அதன் செயலாளர் இந்தத் திணைக்களத்தின் பொறுப்பேற்கும் (கணக்கீட்டு) உத்தியோகத்தர் ஆவார்.

2016 ஆம் ஆண்டு ஆணைக்குழுவின் பதில் கடமை புரியும் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையில் முதல் தர உத்தியோகத்தரானகைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் பிரதி பணிப்பாளரான திருமதி பவித்திரா ஜயதிஸ்ஸ அவர்கள்பதில் கடமை புரியும் செயலாளராக செயற்பட்டு வருகின்றார்.

1972 கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்டத்தில் 9 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஊழியர்குழுவினர் ஒருங்கிணைந்த சேவையிலிருந்து நியமிக்கப்படுவர்.

1972 கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்டத்தில் 12 ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவின் செலவினங்கள் திறைசேரியின் வருடாந்த ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியினால் மேற்கொள்ளப்படும். 2016 ஆம் ஆண்டின் செலவினத் தலைப்பு 302 இன் கீழ் ஒதுக்கீட்டு சட்டமூலத்தினால் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது

## ஊழியர்குழுவும் 2016 ஆம் ஆண்டில் பணிபுரிந்தோரும்.

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிறுவனம்சார் கட்டமைப்பு.



## 2016 ஆம் ஆண்டில் பணிபுரிந்தோர்.

| பதவி | அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி எண்ணிக்கை | 2016.12.31 ஆம் திகதிக்கு பணிபுரிந்தோரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 (பதில் கடமை) | - |
| கணக்காளர் (பி/செயலாளர் - நிதி) | 01 | 01 | - |
| சட்ட அலுவலகர் | 01 | - | 01 |
| நிர்வாக அலுவலகர் (அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் - அதி விசேட தரம்) | 01 | (உள்ளக ஊழியரினால் பதில் கடமை ஆற்றப்படுகின்றது) | 01 |
| அபிவிருத்தி அலுவலர்கள் | 05 | 02 | 03 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் (I/II/III) | 08 | 07 | 01 |
| சாரதி | 03 | 03 | - |
| காரியாலய அலுவலக உதவியாளர் (I/II/III) | 03 | 02 | 01 |
| **மொத்தம்** | **23** | **16** | **07** |

## இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று வந்த அலுவலகர்கள்

| பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| திரு.கே. டபிள்யு. டபிள்யு. ஜீ. குமாரசிங்க | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | - | 2016.01.13 |
| திரு. எஸ். இலங்க கோன் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2016.01.14 | |
| திரு கே .ஜீ. டி. விஜேயவர்த்தன | சாரதி | - | 2016.04.11 |

# அத்தியாயம் - 02

- தேசிய மட்ட கூட்டுறவு சமாசங்கள் மற்றும் நாடளாவிய ஆரம்ப மட்ட கூட்டுறவு சங்கங்களின் பெயர் விபரங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த சங்கங்களில் பணிபுரிந்த ஊழியர்களின் பெயர் விபரங்கள்

# கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் மேற்பார்வையின் கீழான தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சமாசங்கள் மற்றும் நாடளாவிய ஆரம்ப கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஊழியர்களின் சேவை சார்ந்த மற்றும் அது தொடர்பான விடயங்களை விதிமுறைப்படுத்துவதற்கு இந்த ஆணைக்குழுவிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு ஊழியர்களின் தொழிற்பிரச்சனைகளை தீர்ப்பது மாத்திரமல்லாது பதவிகளுக்கான தகைமைகளை தீர்மானித்தல், சம்பள சீர்திருத்தங்களை செய்தல் போன்ற நடவடிக்கைகளும் இந்த ஆணைக்குழுவின் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. இதைத் தவிர இந்த ஆணைக்குழுவினால் தேவையான சந்தர்ப்பங்களில் மாகாண ரீதியான கூட்டுறவு சேவை ஆணைக்குழுவுக்கு சிற்சில விளக்கங்களையும் ஆலோசனைகளையும் அளித்தல், தேசிய ரீதியாக பொதுவான ஒருமைப்பாட்டுடன் செயற்பட தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் போன்றவை மேற்கொள்ளப்படும். கீழ்காட்டப்படும் கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்களின் தொழில் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் இந்த ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படும்.

## தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சமாசங்கள் மற்றும் நாடளவிய ரீதியான ஆரம்பநிலை கூட்டுறவுச் சங்கங்களின் 2016 ஆம் ஆண்டில் பணிபுரிந்தோர்.

| | சமாசங்கள் அல்லது சங்கத்தின் பெயர் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **கூட்டுறவு சம்மேளனங்கள்** | |
| 01 | வ/ப இலங்கை தேசிய கூட்டுறவு சபை | **36** |
| 02 | வ/ப இலங்கையின் சணச மகா சம்மேளனம் | **18** |
| 03 | வ/ப இலங்கை நெசவுக் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | **05** |
| 04 | வ/ப இலங்கை சந்தைப்படுத்தல் கூட்டுறவுச் சம்மேளனம் | **111** |
| 05 | வ/ப இலங்கை தேசிய மீனவக் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | **03** |
| 06 | வ/ப இலங்கை தேயிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | **01** |
| 07 | வ/ப இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி சம்மேளனம் | **20** |
| 08 | வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | **162** |
| 09 | வ/ப இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | **31** |
| 10 | வ/ப இலங்கை கூட்டுறவுக் கைத்தொழில் சம்மேளனம் | **41** |
| 11 | வ/ப இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | **09** |
| 12 | வ/ப இலங்கை வள முகாமைத்துவக் கூட்டுறவுக் கூட்டமைப்பு | **03** |

| நாடளாவிய ரீதியிலான சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்கள் | | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 13 | வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் சிக்கனக் கடனுதவிச் கூட்டுறவுச் சங்கம் | 777 |
| 14 | வ/ப சுகாதாரத் திணைக்களத்தின் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம். | 76 |
| 15 | வ/ப புகையிரத நிலைய அதிபர் மற்றும் எழுதுவினைஞர்களின் சிக்கனக் கடனுதவிச் கூட்டுறவுச் சங்கம் | 04 |
| 16 | வ/ப தபால் மற்றும் மின்னஞ்சல் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம் | 34 |
| 17 | வ/ப பிரவுண் கூட்டுத்தாபன கைத்தொழில் மற்றும் பொதுச் சேவை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 18 | வ/ப சணச அபிவிருத்தி வங்கியின் ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் | 24 |
| 19 | வ/ப ரஜரட பல்கலைக்கழகக் கூட்டுறவுச் சங்கம் | 06 |
| 20 | வ/ப துறைமுகக் கப்பல் சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 07 |
| 21 | வ/ப தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அனைத்து ஊழியர்களின் கடன் வழங்கும் சங்கம் | 09 |
| 22 | வ/ப தேசிய வருமானவரித் திணைக்களத்தின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 02 |
| 23 | வ/ப சமுர்த்தி அபிவிருத்தி, கமத்தொழில் உதவி உத்தியோகத்தர்களின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 05 |
| 24 | வ/ப அரச பொறியியல் கூட்டுத்தாபன சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் | 06 |
| 25 | வ/ப அரசாங்க சேவை பட்டதாரிகளின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 11 |
| 26 | வ/ப புகையிரத பாதை பணித் திணைக்களத்தின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 01 |
| 27 | வ/ப துறைமுக அதிகார சபை ஊழியர்களின் கூட்டுறவு வங்கி | 18 |
| 28 | வ/ப சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 34 |
| 29 | வ/ப சுகாதார சேவை பணச் சேமிப்பு கூட்டுறவுக் கடனுதவிச் சங்கம் | 23 |
| 30 | வ/ப பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 02 |
| 31 | வ/ப இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 02 |
| 32 | வ/ப இலங்கை மகளீர் அபிவிருத்தி சேவை கூட்டுறவுச் சங்கம் | 42 |
| 33 | வ/ப மக்கள் வங்கி ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | 10 |

| | | |
|---|---|---|
| 34 | வ/ப கொழும்பு தேசிய வைத்தியசாலை ஊழியர்களின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | **10** |
| 35 | வ/ப இ.போ.ச ஊழியர் சிக்கன மற்றும் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் | **06** |
| 36 | வ/ப அரசாங்க சேவை கூட்டுறவுக் கடனுதவி மற்றும் சேமிப்புச் சங்கம் | **37** |
| 37 | வ/ப சதோச ஊழியர்களின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | **09** |
| 38 | வ/ப இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஊழியர் நலன்புரி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | **19** |
| 39 | வ/ப இலங்கை அளவுத் திணைக்களத்தின் அளத்தல் உதவியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | **07** |
| 40 | வ/ப தோட்டத் தொழில் அலுவலகர்களின் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம் | **02** |
| 41 | வ/ப கூட்டுறவுத் திணைக்களத்தின் உயர் அலுவலகர்களின் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவு சங்கம் | **07** |
| **இதர சங்கங்கள்** | | **ஊழியர்களின் எண்ணிக்கை** |
| 42 | வ/ப அகில இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விதைக் களஞ்சிய வியாபாரிகளின் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் | **01** |
| 43 | வ/ப இலங்கை உருக்குக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | **08** |
| 44 | வ/ப அகில இலங்கை அப்பியாசக் கொப்பி தயாரிப்பாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | **07** |
| 45 | வ/ப அச்சகக் கலைஞர்களின் கூட்டுறவுச் சங்கம் | **14** |
| 46 | வ/ப அகில இலங்கை விசித்திர பயிர் மற்றும் தொங்கு பயிர் கூட்டுறவுச் சங்கம் | **12** |

# அத்தியாயம் - 03

- இவ்வருட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்திய சாதாரண மற்றும் விசேட செயற்பாடுகளை மீளாய்வு செய்தல்.
- 2016 ஆம் ஆண்டின் செயற்பாடுகளின் சாரம்சமும் நிதிச் செயற்பாடும்.

# 2016ஆம் ஆண்டில் ஆற்றிய செயற்பாடுகளின் மீளாய்வு

கூட்டுறவு ஊழியர்களும் கூட்டுறவு சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மற்றும் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளை முன்வைக்கும் விதம் குறித்து ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவு ஊழியர் தாபனக் கோவைக்கு அமைய கூட்டுறவு ஊழியர்களுக்கு உரித்தான உரிமைகள் தொடர்பாகவும் வரப்பிரசாதங்கள் தொடர்பாகவும் அறிவுறுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டினுள் 10செயலமர்வுகளை நடாத்த திட்டமிட்டதுடன் 2016 மார்கழி 31 ஆம் திகதியின் போது அவ்வாறான 13செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற செயலமர்வுகள்










# கூட்டுறவு ஊழியர்களின்செயலமர்வுகள் மற்றும் ஆளணிப்படையின்செயலமர்வுகள் 2016

கூட்டுறவு ஊழியர்கள் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட செயலமர்வுகள்

| | நிறுவனம் | நடைமுறைபடுத்திய செயலமர்வு | பங்குபற்றிய வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | திறன் அபிவித்தி நிதியம் | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அலுவலகர்களுக்கான பயிற்சி செயலமர்வு (உத்தியோகத்தர்களின் தனிநபர் கோப்பு தொடர்பானது) | 02 |
| 02 | வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் சிக்கனக் கடனுதவிச் கூட்டுறவுச் சங்கம்-சபரகமுவ மாகாணம் | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபனக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல் | 85 |
| 03. | வ/ப அகில இலங்கை விசித்திர பயிர் மற்றும் தொங்கு பயிர் கூட்டுறவுச் சங்கம்<br>வ/ப இ.போ.ச ஊழியர் சிக்கன மற்றும் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்<br>வ/ப இலங்கை சணச சம்மேளனம்<br>வ/ப அகில இலங்கை அப்பியாசக் கொப்பி தயாரிப்பாளர்களின் கூட்டுறவுச் சங்கம்<br>வ/ப இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்க சம்மேளனம்<br>வ/ப அச்சகக் கலைஞர்களின் கூட்டுறவுச் சங்கம்<br>வ/ப இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனம்<br>வ/ப கொழும்பு தேசிய வைத்தியசாலை ஊழியர்களின் சணச | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபனக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல். | 20 |
| 04. | வ/ப இலங்கை சந்தைப்படுத்தல் கூட்டுறவு விற்பனை சம்மேளனம் | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபனக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல். | 30 |
| 05. | வ/ப இலங்கை சந்தைப்படுத்தல் கூட்டுறவு விற்பனை சம்மேளனம் | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபனக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல் | 40 |

| | | | |
|---|---|---|---|
| 06. | வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் சிக்கனக் கடனுதவிச் கூட்டுறவுச் சங்கம்- மேல் மாகாணம் | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபனக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல் | 90 |
| 07. | திறன் அபிவித்தி நிதியம் | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான பயிற்சி செயலமர்வு (சாரதி) | 03 |
| 08. | வ/ப இலங்கை மகளீர் அபிவிருத்தி சேவை கூட்டுறவுச் சங்கம் | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபனக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல் | 65 |
| 09. | திறன் அபிவிருத்தி நிதியம் | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அலுவலகர்களுக்கான பயிற்சி செயலமர்வு | 30 |
| 10. | அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் | ஓய்ேதிய கொடுப்பனவு முறைகள் தொடர்பான அறிவுட்டல் | 55 |
| 11. | வ/ப மக்கள் வங்கி ஊழியர் கூட்டுறவுக் கடனுதவிச் சங்கம் | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபனக் கோவை மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை பற்றிய தெளிவுபடுத்தல் | 30 |
| 12. | அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் | இல 2016/01 கொண்ட புதிய சம்பள சுற்றுநிருபம் தொடர்பான தெளிவுபடுத்தும் செயலமர்வு | 150 |
| 13 | அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும | இல 2016/01 கொண்ட புதிய சம்பள சுற்றுநிருபம் தொடர்பான தெளிவுபடுத்தும் செயலமர்வு | 80 |

கூட்டுறவு ஊழியர்கள் தொடர்பான சட்ட ரீதியான பிரச்சனைகளில் நீதிமன்றத்துக்கு ஒத்துழைப்பை வழங்குதலும் ஆணைக்குழுவை பொறுப்பாளியாக பெயரிடப்பட்டுள்ள வழக்குகளில் நீதிபதித் திணைக்களத்தின் அலுவலகர்களுக்கு ஒத்துழைப்பை வழங்குதலும் இந்த ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணியாகும். அவ்வாறான வழக்குகளுக்காக 2016 மார்கழி 31 ஆம் திகதி வரையில் அவ்வாறான 16 வழக்குகளுக்காக ஆணைக்குழுவின் சார்பாக அலுவலர்கள் முன்நின்றனர்.

| **வழக்கு இலக்கம்** | **முறைப்பாடு** | **பிரதிவாதி** | **2016.12.31 ஆம் திகதிக்கு நிலைமை** |
|---|---|---|---|
| 3267.3275.3276. 3277.3278.3279. 3280.3281.3284 | வ/ப கம்பல்பத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட சில ஊழியர்கள் | வ/ப கம்பல்பத்து தெங்கு உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் (ஆணைக்குழு சாட்சிக்காக அழைக்கப்பட்டிருந்தது) | மாரவில நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றது. |
| 3265.3266.3269. 3270.3271.3273. 3274 | வ/ப கம்பல்பத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட சில ஊழியர்கள் | வ/ப கம்பல்பத்து தெங்கு உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் (ஆணைக்குழு சாட்சிக்காக அழைக்கப்பட்டிருந்தது) | ஆணைக்குழு தீர்வை செயற்படுத்தி தீர்ப்பு வழங்கியுள்ளது. அதற்கு எதிராக சங்கத்தினால் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. |

## * 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை

| | கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் | பதவி | அனுமதித்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | வ/ப இலங்கை சுகாதார பணியாளர்களின் அபிவிருத்தி சேவை கூட்டுறவு சங்கம் | சுத்திகரிப்பு பணியாளர்கள் | 01 |
| 02. | வ/ப இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனம | பொது முகாமையாளர் | 01 |
| 03. | வ/ப மக்கள் வங்கி ஊழியர் சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்கம் | விற்பனை முகாமையாளர் | 01 |
| 04. | வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் சிக்கனக் கடனுதவிச் கூட்டுறவுச் சங்கம் | உதவி பொது முகாமையாளர் | 01 |
| 05. | வ/ப அரச பொறியியல் கூட்டுத்தாபன சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 06. | வ/ப தபால் மற்றும் மின்னஞ்சல் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 07. | வ/ப இலங்கை சுகாதார பணியாளர்களின் அபிவிருத்தி சேவை கூட்டுறவு சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| 08. | வ/ப இ.போ.ச ஊழியர் சிக்கன மற்றும் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| 09. | வ/ப இலங்கை சுகாதார பணியாளர்களின் அபிவிருத்தி சேவை கூட்டுறவு சங்கம் | உதவி உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| 10. | வ/ப இ.போ.ச ஊழியர் சிக்கன மற்றும் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் | கணக்காளர் | 01 |
| 11. | வ/ப இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஊழியர் நலன்புரி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | கணக்காளர் | 01 |
| 12. | வ/ப இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஊழியர் நலன்புரி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 13. | வ/ப அச்சகக் கலைஞர்களின் கூட்டுறவுச் சங்கம் | கணக்காளர் | 01 |
| 14. | வ/ப இலங்கை சந்தைப்படுத்தல் கூட்டுறவுச் சம்மேளனம் | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| | | விற்பனை உதவியாளர் | 04 |
| | | சிற்றூழியர் | 05 |
| **15.** | வ/ப மக்கள் வங்கி ஊழியர் சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்கம் | பொது முகாமையாளர் | 01 |
| | மொத்தம் | | 26 |

**மேற்குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளுக்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட விஷேட செயற்பாடுகள்.**

கூட்டுறவு ஊழியர்களுக்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட 2007/5 ஐ கொண்ட சம்பளச் சுற்றறிக்கை தற்கால தேவைகளுக்கு பொருந்துமாறு திருத்தங்களை மேற்கொண்டு தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் நாடளாவிய ரீதியான ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமான அனுமதிக்கப்பட்ட ஆளணிப்படைபதவிநிலைகள்> சம்பள அளவுத்திட்டம் மற்றும் தேவையான தகமைகள் என்னும் தலைப்புக்களில் 2016.12.20 திகதியன்று உத்தியோகéர்வமாக வெளியிடப்பட்டது.

**2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆற்றப்பட்ட செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையும் மேற்கொள்ளப்பட்ட செலவினமும்**

| | செயற்பாடு | வரவு செலவு ஒதுக்கீடு ரூபா | 2016.12.31 ஆம் திகதியில் செலவினம் ரூபா | மிகுதி ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கூட்டுறவு ஊழியர்கள் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும். | 850,000.00 | 771,900.00 | 78,100.00 |




| விபரம் | 2015 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| **பயிற்றுவித்தலும் ஆற்றல் விருத்தியும்** | 618,385.05 | 771,900.00 |
| **தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்** | 367,998.00 | - |




| **விபரம்** | **2015**(ரூபா.) | **2016**(ரூபா.) |
|---|---|---|
| ஊதியம் | 7,041,525.78 | 7,531,514.29 |
| போக்குவரத்துச் செலவு | 42,935.50 | 34,902.50 |
| வழங்கீட்டு சேவை | 640,660.41 | 761,028.42 |
| பராமரிப்புச் செலவு | 884,019.11 | 1,088,327.27 |
| ஒப்பந்தச் சேவை | 4,627,038.07 | 3,725,681.54 |
| மாற்றுதல் | 36,345.24 | 20,537.20 |




| | 2015 (ரூபா.) | 2016 (ரூபா.) |
|---|---|---|
| 1வது காலாண்டு | 2,180,644.63 | 2,797,245.11 |
| 2வது காலாண்டு | 3,264,344.89 | 3,357,591.74 |
| 3வது காலாண்டு | 3,235,106.17 | 3,403,966.36 |
| 4வது காலாண்டு | 5,809,554.23 | 4,375,088.01 |

## 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்த உத்தேசித்திருந்த விசேட வேலைத் திட்டங்கள்.

பின்வரும் கருத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்டது.

| | கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தின் கால எல்லை | மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா) | நிதியளிக்கப்படும் தன்மை | நோக்கம் |
|---|---|---|---|---|---|
| 01. | கூட்டுறவு ஊழியர்களுக்கான தாபன கோவை தொடர்பான தெளிவுபடுத்தும் நி.திட்டம் | 2017 ஜனவரி – டிசம்பர் | ரூபா.750,000.00 | வரவு செலவுத்திட்ட ஒதுக்கம் | கூட்டுறவு வியாபாரம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தல் |
| 02. | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியழித்தல் | 2017 ஜனவரி – டிசம்பர் | ரூபா.150,000.00 | வரவு செலவுத்திட்ட ஒதுக்கம் | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஊழியர்களின் வினைத்திறனை உயர்த்துதல் |